பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 07 | செவ்வாய்க்கிழமை | 24.10.2023 | அதிர்வு 84

## வாகன விபத்துக்களில் ஐவர் பரிதாப மரணம்!

நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இரண்டு இளைஞர்கள் உட்பட 5 பேர் சாவடைந்துள்ளனர்.

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுநாயக்க விமான நிலையம் மினுவாங்கொடை பிரதான வீதியின் 04▶

# அமைச்சரவை மாற்றத்தை விமர்சிக்க மொட்டுக்கு எந்த உரிமையும் இல்லை

## ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கேள்விக்குட்படுத்தவே முடியாது என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார பதிலடி



- சுடர் திலீபன் -

அமைச்சரவைமாற்றத்தைவிமர்சிக்கஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றத்தை அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது. 04▶

# மின்சார சபை மறுசீரமைப்பு

## அடுத்த வாரம் அமைச்சரவைக்கு யோசனை



இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகள் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதுவரை ஆறு 07▶

# ஆதரவை வாபஸ் பெற்றால் ரணில் கவிழ்ந்தே தீருவார்!

## மொட்டு எம்.பி. எச்சரிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது அரசியல் சுயநலம் கருதி தான் நினைத்த மாதிரி ஆடுகின்றார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குற்றம் சாட்டினார்.

"ஸ்ரீலங்கா 04▶



# காதலி வெட்டிக்கொலை காதலன் குத்திக்கொலை

## மொனராகலையில் பயங்கரம்

ஒரே பிரதேசத்தில் 5 நாட்களுக்குள் யுவதி ஒருவரும், இளைஞர் ஒருவரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூர சம்பவம் மொனராகலை மாவட்டம், மதுள்ளை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த இருவரும் காதலர்கள் என்று பொலிஸ் 04▶



# ஏழு நாடுகளின் பிரஜைகள் இலங்கை வர இலவச விசா

## அமைச்சரவை அனுமதி



இந்தியா, சீனா, ரஷ்யா, மலேசியா, ஜப்பான், இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவதற்கான இலவச விசா வழங்கும் திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், ஒரு முன்னோடித் திட்டமான 04▶




ஒரு பெரிய வர்த்தக சாம்ராஜ்யத்தை ஒரு சின்ன வீடியோ கிளிப் மூலம் தகர்க்க முடியுமா ? முடிந்திருக்கின்றது. அது பற்றிய தகவல் இன்று.

சீனாவின் சிறந்த பியர் உற்பத்தி நிறுவனங்களில் சிங்தாவோ (Tsingtao) ஒன்று. அந்த நாட்டின் மிகப்பெரிய ஏற்றுமதி நிறுவனம். இந்த பிராண்ட் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நன்கு அறியப்பட்டது. அதிக வரவேற்பைப் பெற்றது. 04▶

# அரசமைப்புப் பேரவையை ஜனாதிபதி ரணில் மலினப்படுத்தும் விதத்தில் செயற்படுகிறார்!

## பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் காட்டம்



**அரசமைப்புப் பேரவையை மலினப்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயற்படுகிறார். அரசமைப்புப் பேரவையால் நிராகரிக்கப்பட்ட பரிந்துரையை செயற்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது.**

**பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள சேவை கால நீடிப்பை இனி தொடர முடியாது என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.**

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

அரசமைப்புப் பேரவையின் பரிந்துரை மற்றும் அனுமதிக்கு அமையவே சுயாதீன ஆணைக்குழுக்கள் உட்பட முக்கிய அரச உயர் பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதி வழங்க வேண்டும். அரசமைப்புப் பேரவையால் புறக்கணிக்கப்பட்ட ஒரு பரிந்துரையை ஜனாதிபதியால் செயற்படுத்த முடியாது.

பொலிஸ் மா அதிபர் நியமனம் பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. எமது அரசியல் அனுபத்தில் இவ்வாறான இழுபறி நிலையை முன்னொருபோதும் கண்டதில்லை.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் பதவிக் காலம் கடந்த மார்ச் மாதத்துடன் நிறைவு பெற்றது. புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் இழுபறி நிலையில் இருந்ததால் சி.டி.விக்கிரமரத்னவுக்கு இரண்டு முறை சேவைக் கால நீடிப்பு வழங்கப்பட்டது.

அரசமைப்புப் பேரவையின் அனுமதியுடன் பொலிஸ்டா அதிபருக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு 2023.10.09 ஆம் திகதியுடன் நிறைவுப் பெற்றது.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு மீண்டும் சேவை நீடிப்பு வழங்குமாறு ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரையை அரசமைப்புப் பேரவை ஏற்றுக்கொள்ளவில்லை.

புதிய பொலிஸ்மா அதிபரின் பெயரை பரிந்துரைக்குமாறு அரசமைப்புப் பேரவை ஜனாதிபதிக்கு அறிவுறுத்தியது.

அரசமைப்புப் பேரவையின் பரிந்துரையை புறக்கணித்து முறையற்ற வகையில் பொலிஸ்மா அதிபருக்கு மூன்றுவார காலம் சேவை கால நீடிப்பை ஜனாதிபதி வழங்கியுள்ளார். அரசமைப்புப் பேரவையை மலினப்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயற்படுவது வெறுக்கத்தக்கது.

நாடாளுமன்றத் தேர்தல் முறைமையை திருத்தம் செய்வது தொடர்பில் நீதியமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனை குறித்து பிரதமர் தலைமையில் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் விசேட பேச்சு வார்த்தை இடம்பெற்றது.

இந்தப் பேச்சுவார்த்தையை சகல எதிர்க்கட்சிகளும் புறக்கணித்தன. ஒருசில எதிர்க்கட்சிகள் மாத்திரம் கலந்துக் கொண்டு தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பான அரசாங்கத்தின் நகர்வுகளை வன்மையாகக் கண்டித்துள்ளன.

தேர்தல் முறைமைத் திருத்தம் எவ்வாறான பெறுபேற்றை வழங்கும் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். பெண் பிரதிநிதித்துவத்தில் திருத்தம் செய்தாக குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்வைத்த யோசனையால் மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை வரையறுப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு புதிய எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் காணாமலாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் நாடாளுமன்றத் தேர்தல் முறைமையை திருத்தம் செய்ய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இது நாடாளுமன்றத் தேர்தலை பிற்போடும் உள்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை அனைவரும் நன்கு அறிவோம்.

அரசமைப்பின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் இடம்பெற வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் மறைமுகமாக மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய வேண்டும் என்ற யோசனையை ஆளும் தரப்பின் ஒருசில உறுப்பினர்கள் முன்வைத்தார்கள்.

அந்த முயற்சிக்கு நீதிமன்றம் தடையாக அமையும் என்பதை அரசாங்கம் உணர்ந்துக் கொண்டதால் ஜனாதிபதி தேர்தல் 2024 ஆம் ஆண்டு இடம்பெறும் என்று குறிப்பிடும் நிலை தோற்றம் பெற்றுள்ளது. – என்றார்.

# முள்ளியவளை நீராவிப்பிட்டியில் இளம் தம்பதியினரக் காணோம்!

முல்லைத்தீவு – முள்ளியவளை நீராவிப்பிட்டி பகுதியில் வசித்த இளம் குடும்பத்தைக் காணவில்லை என உறவினர்களினால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு காணாமல் போன இளம் குடும்பத்தில் உள்ள பெண்ணின் தயாரால்நேற்றுச் செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் இந்தத் தயார் தனது மகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் திருமணமாகியுள்ளார் எனக் கூறுகின்றார். மருமகன் (வயது 23) இருவரும் கடந்த மாதம் முதல் முள்ளியவளை – நீராவிப்பிட்டி பகுதியில் வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கி வாழ்ந்துள்ளார்கள்.

தனது மகள் தன்னுடன் தொலைபேசியில் உரையாடுவார் எனவும் கடந்த திகதிக்குப் பின்னர் மகளின் தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் நேற்று மகளும் மருமகனும் வசிக்கும் வீட்டிற்குச் சென்று பார்த்தபோது வீட்டில் யாரும் இல்லாத நிலையில் இருவரின் தொலைபேசிகளும் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது எனவும் கூறுகிறார்.

இந்த நிலையில் அவர்கள் தங்கி இருந்த வீட்டின் பின்புறம் புதிதாக மண்ணால் நிரப்பட்ட குழி ஒன்று காணப்படுகின்றது.

இதனால் சந்தேகம் அடைந்த தாயார் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

தனது மகளுக்கும் மருமகனுக்கும் என்ன நடந்தது என்பது தொடர்பில் தாயார் சந்தேகம் கொண்டுள்ளார். இது தொடர்பிலான விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

# சுகாதாரத்துறையை மீட்டெடுக்க ஜனாதிபதிக்குப் பொறுப்புள்ளது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

சுகாதார துறையை மீட்டெடுக்க ஜனாதிபதிக்கு முக்கிய பொறுப்புள்ளது. கட்டாயமாக ஜனாதிபதியின் தலையீடு இதற்கு அவசியமாகும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அலுத்கே தெரிவித்துள்ளார்.

சுகாதார துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தெளிவுபடுத்தும் வகையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் நேற்று கொழும்பில் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது வைத்தியர் ஹரித்த அலுத்கே மேலும் தெரிவிக்கையில் –

வரலாற்றில் ஊழல் யுகமொன்று சுகாதார துறையில் ஏற்பட்டுள்ள நிலையில் உடல் முழுவதும் புற்றுநோய் பரவி வாய் மூலமாக மருந்து செலுத்தி, ஊசிகளை செலுத்தி குணப்படுத்த முடியாத நிலை போன்று இன்று நாம் வீதியில் இறங்கியுள்ளோம்.

சாதாரண மக்களுக்கு தெளிவுப்படுத்தும் வகையில் துண்டுபிரசுரங்களை விநியோக்கின்றோம். சுகாதார துறையை மீட்டெடுக்க ஜனாதிபதிக்கு முக்கிய பொறுப்புள்ளது. கட்டாயமாக ஜனாதிபதியின் தலையீடு இதற்கு அவசியமாகும். – என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை போக்குவரத்துக் கொடுப்பனவுகளை அதிகரித்தல் உள்ளிட்ட சில



கோரிக்கைகளை முன்வைத்து சுகாதாரப் பரிசோதகர்கள் நாடளாவிய ரீதியில் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

# செப்டெம்பரில் பணவீக்கம் 0.8 சதவீதத்துக்கு வீழ்ச்சி




தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெணுக்கு அமைவாக மதிப்பிடப்படும் நாடளாவிய ரீதியிலான பணவீக்கம் கடந்த ஓகஸ்ட் மாதம் 2.1 சதவீதமாகப் பதிவாகியிருந்தது.

இந்த நிலையில், அது செப்டெம்பர் மாதம் 0.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதன்படி, கடந்த ஓகஸ்ட் மாதம் 5.4 சதவீதமாகப் பதிவாயிருந்த உணவுப்பொருள்களின் விலைகள் செப்டெம்பர் மாதத்தில் 5.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளன.

அதேவேளை, ஓகஸ்டில் 9 சதவீதமாகப் பதிவாகியிருந்த உணவல்லாப் பொருள்க

ளின் விலைகள் மற்றும் கட்டணங்கள் செப்டெம்பரில் 5.9 சதவீதமாகப் பதிவாகின.

பொருளாதார நெருக்கடியின் விளைவாக கடந்த காலங்களில் இதற்கு முன்னர் ஒருபோதுமில்லாத அளவுக்கு மிகவும் உயர்வான பணவீக்கத்தை இலங்கை பதிவுசெய்திருந்த போதிலும், கடந்த ஜுன் மாதம் முதல் பணவீக்கம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்தது. இது ரூபாவின் பெறுமதி ஸ்திரமடைவதற்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தது.

# பல்கலை விரிவுரையாளர் பதவிகள் மொத்தம் ஏழாயிரம் வெற்றிடங்கள்!

## சஜித் அதிர்ச்சித் தகவல்

நாட்டில் தற்போது ஏழாயிரம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள விரிவுரையாளர்களில் 700 தொடக்கம் 800 பேர் பணியை விட்டு வெளியேறியுள்ளனர். 200 முதல் 300 பேர் விடுமுறையில் சென்றுள்ளனர். மற்றுமொரு குழு வெளிநாட்டு பயிற்சிக்காக சென்றுள்ள நிலையில் 12, 900 விரிவுரையாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில் தற்போது 5, 900 பேர் மாத்திரமே இருக்கின்றனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பல்கலைக்கழக முறைமையின் பிரச்சினைகள் தொடர்பாக ஆற்றிய உரையின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் –

“கடந்த 2018ஆம் ஆண்டில் 30,000 பேரும் , 2022ஆம் ஆண்டில் 45,000 பேரும், இவ்வாண்டில் 59,000 பேரும் பல்கலைக்கழகங்களுக்காக ஆள்சேர்ப்பு செய்யப்பட இருந்த போதிலும் பல்கலைக்கழகங்களில் உள்ள மனித வளம் மற்றும் பௌதீக வளங்கள் போதுமானதாக இல்லை.

இந்த எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு நடைமுறையில் 6200 விரிவுரையாளர்கள் மாத்திரமே உள்ளனர்.

இக்குறைபாட்டைச் சமாளிக்க வெளி விரிவுரையாளர்களை பணியமர்த்துவது அவசியமான போதிலும், அதற்கு அரசாங்கம் பணம் ஒதுக்குவதில்லை. விரிவுரையாளர்களை பணியமர்த்து வதில் பல பாரிய சம்பள முரண்பாடுகள் காணப்படுகின்றன.

நாடு தற்போதைய வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கு அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

இந்த வீழ்ச்சியிலிருந்து வெளியேற அறிவும் கல்வியும் புலனாய்வு மையமாக இருக்க வேண்டும்.

இருப்பினும் தற்போதைய அரசாங்கமானது நாட்டின் உயர் கல்வியை முற்றிலுமாக நாசப்படுத்துகிறது.” – எனவும் குறிப்பிட்டார்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதை ஒட்டி வெளியான ஒரு சின்ன வீடியோ கிளிப்பை அடுத்து நேற்று காலை ஷங்காய் பங்குச்சந்தை திறக்



கப்பட்ட போது சிங்தாவோ புருவரியின் பங்குகள் மளமளவென மிகக் கடுமையாக – அதிர்ச்சி தரும் வகையில் – வீழ்ச்சி அடைந்தன.

கடந்த வியாழக்கிழமை ஒன்லைனில் வெளிவந்த அந்த வீடியோ கிளிப் பல கோடிப் பேரால் பார்க்கப்பட்டிருக்கின்றது. அந்த பியர் நேயர்களை வெறுக்க வைத்திருக்கின்றது அந்த கிளிப். அதில் அப்படி என்னதான் இருந்தது ?

பியர் தயாரிப்புக்கான தொட்டியில் அதற்கான மூலப் பொருள்கள் குவிந்து கிடக்கின்றன. அந்த நிறுவனத்தின் ஹெல்மெட்டும் சீருடையும் அணிந்த தொழிலாளி ஒருவர் தொட்டியின் உயரமான சுவரை ஏறிக் குதித்து தொட்டிக்குள் இறங்கி, குவிந்திருக்கும் மூலப் பொருள்கள் மலை மீது சிறுநீர் கழிக்கின்றார். அவ்வளவுதான் அந்தக் கிளிப்பில் உள்ளது. அந்த சேமிப்புத் தொட்டியின் இலக்கம் மற்றும் விவரங்கள் எல்லாம் அந்தக் கிளிப்பில் பதிவாகியுள்ளன.

"ஒரு சிறுநீர் கழிப்பின் (பிஸ்) மூலம் ஒரு தொழிலாளி இந்த நிறுவனத்தையே நாசமாக்கி விட்டார்" – என்று இணையத்தளக் கருத்துக்கள் தெரிவிக்கின்றன.

"நல்ல காலம் நான் பியர் அருந்துவதில்லை. எப்படியாயினும் இந்த வீடியோவுடன் இந்த பியர் பிராண்ட் தொலைந்து போனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை." – என்கிறார் ஓர் இணைய நேயர்.

"இது முதல் முறையா? அல்லது பல தொடர் நிகழ்வுகளில் இதுவும் ஒன்றா?" – என்றும் ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த விடயம் குறித்து சீன அதிகாரிகள், வர்த்தக பொறுப்பாளர்கள் போன்றோரின் தலையீட்டில் பொலிஸார் புலனாய்வு மற்றும் விசாரணைகளை ஆரம்பித்திருந்தாலும் சரிந்து விட்ட அந்த பியர் கம்பெனியின் மவுசை இனித் தூக்கி நிறுத்துவது கஷ்டம்தான்...!

## ஆதரவை வாபஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொதுஜன பெரமுனவுடன் பேசாமல் அமைச்சரவையை மாற்றுவதற்கு ஜனாதிபதிக்குத் துணிவு வந்துவிட்டதா?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவை மொட்டுக் கட்சி வாபஸ் பெற்றால் அவர் கவிழ்ந்தே தீருவார்" என்றும் ஜோன்ஸ்டன் எம்.பி. எச்சரிக்கை விடுத்தார்.

நேற்றைய அமைச்சரவை மாற்றம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

## ஏழு நாடுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

இந்தத் திட்டம் 2024 மார்ச் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை உறுதி செய்யும் முகமாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தனது உத்தியோக பூர்வ ருவிட்டர் செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

## வாகன விபத்துக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆண்டியம்பலம் மத்திய மருந்தகத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மினுவாங்கொடையில் இருந்து விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த ஓட்டோ எதிர்த் திசையில் இருந்து வந்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதியும் பின் இருக்கையில் பயணித்த இளைஞரும் நீர்கொழும்பு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளனர்.

தபெம்முல்ல மற்றும் மகேவிட்ட பிரதேசத்தில் வசிக்கும் 19 மற்றும் 25 வயதுடையவர்களே உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, காலியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் ஒன்று வாத்துவ பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் 52 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும், தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மரத்தில் மோதியதில் 56 வயதுடைய மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் உயிரிழந்துள்ளார்.

அம்புலுவாவ, ஹெம்மாதகம பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 75 வயதுடைய பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## அமைச்சரவை மாற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் தவறான முடிவை எடுத்துள்ளார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. நேற்று தெரிவித்திருந்தார். சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து கெஹலிய ரம்புக்வெலவை மாற்றியது முற்றிலும் தவறான விடயம் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பில் அரசின் பங்காளிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான மனுஷ நாணயக்கார கருத்துத் தெரிவிக்கையில்,

"அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதியே. எனவே, அமைச்சர்களை நீக்குவதற்கும், அமைச்சர்களை மாற்றுவதற்கும், புதியவர்களை நியமிப்பதற்கும் ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் உண்டு. அதற்கமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். அவசியம் கருதி இந்த மாற்றத்தை அவர் செய்துள்ளார். இதனை விமர்சிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எந்த உரிமையும் கிடையாது. மொட்டுக் கட்சி மாத்திரம் இந்த அரசின் பங்காளிக் கட்சி அல்ல. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எனப் பல கட்சிகள் இந்த அரசின் பங்காளிக் கட்சிகளாக உள்ளன.

இந்த அரசின் தலைவரும் அமைச்சரவையின் தலைவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. ஜனாதிபதியின் அதிகாரத்தை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளருக்கு இதை விட வேறு விளக்கத்தை என்னால் வழங்க முடியாது." – என்றார்.

## காதலி வெட்டிக்கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விசாரணையில் தெரியவந்துள்ளது.

மதுள்ளைபிரதேசத்தில்கடந்தவியாழக் கிழமை 22 வயதுடைய எஸ்.சதுரிகா என்ற யுவதி கூரிய ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அதே பிரதேசத்தில் நேற்று திங்கட் கிழமை 24 வயதுடைய ஆர்.குமார சிறி என்ற இளைஞர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

யுவதியின் முன்னாள் காதலன் தலைமையிலான குழுவினரால் இந்தக் கொலைகள் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

முன்னாள் காதலன் எனச் சந்தேகிக்கப்படும் 27 வயதுடைய இளைஞர் அப்பிரதேசத்தில் தலைமறைவாகியுள்ளார் என்றும், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™ GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

**Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living**

+94 777 546 546 +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. www.blueocean.lk www.kelsey.lk

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலும் தேர்தலும்

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு - 2024இல் - நடைபெறும். அதன் பின்னர் பொதுத் தேர்தல். அதைத் தொடர்ந்து 2025 இன் முதல் காலாண்டில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று நேற்று முன்தினம் தமது கட்சியின் தேசிய மாநாட்டில் அறிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவரது அந்த அறிவிப்பில் தொக்கி நிற்கும் இரண்டு விடயங்கள் அவதானிக்கத் தக்கவை.

ஒன்று - தான் போட்டியிட எதிர்பார்த்து உள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தேசிய மட்டத்தில் வேறு எந்தத் தேர்தலையும் நடத்துவதற்கு அவர் அனுமதிக்க மாட்டார்.

அடுத்தது - இந்த ஆண்டு ஆரம்பத்தில் நடந்திருக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை தனது நிதி அதிகாரம் மூலம் தடுத்துவிட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதை இப்போதைக்கு நடத்தும் எண்ணம் அடியோடு கிடையாது. அதை நிரந்தரமாகப் புதைத்து விட்டார்.

- இந்த இரண்டும் அவரது உரையின் ஊடாக அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளன. அவற்றில் - அந்த அறிவிப்பில் - ஒரு வேடிக்கை உண்டு. அதுவும் அவதானிக்கத்தக்கது.

அடுத்த ஆண்டு அக்டோபரில் - இன்னும் சரியாக ஒரு வருடத்தில் - ஜனாதிபதித் தேர்தல் நடந்தாக வேண்டும். அது அரசமைப்பு ஏற்பாடு. அதை முற்கூட்டியோ அல்லது பின்னுக்குத் தள்ளிப் போட்டோ நடத்தச் செய்யும் அதிகாரம் ஜனாதிபதி ரணிலுக்குக் கிடையாது. ஆகவே, அந்தத் தேர்தல் அவரது கையையும் மீறி - சட்டப்படி - அந்தக் காலத்தில் நடத்தப்படும். அதை அவர் ஒன்றும் செய்ய முடியாது. விரும்பினால் அறிவிக்கப்படும் தேர்தலில் தாமும் ஒரு வேட்பாளராக அவரும் போட்டியிடலாம். அவ்வளவு தான்.

அவர் குறிப்பிடும் அடுத்த விடயம் பொதுத்தேர்தல். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றைக் கலைத்துத் தேர்தலுக்குவாய்ப்பளிக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்பதை மேற்படி அறிவிப்பின் மூலம் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பொதுத் தேர்தல் என்கிறார் அவர். அடுத்த ஆண்டு அக்டோபரில் ஜனாதிபதித் தேர்தல் சட்டப்படியான காலத்தில் நடத்தப்பட்டால் , 2025 ஒக்டோபர் வரை பதவியில் இருக்கக்கூடிய நாடாளுமன்றை மேற்படி ஜனாதிபதி தேர்தல் முடிந்த பிறகு முற்கூட்டியே நடத்துவதற்கு வசதியாக தேர்தல் முடிந்த பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும். அதை, அப்போது - ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் - முன்னெடுப்பதாயின், அந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளருக்கே அந்த அதிகாரம் கிட்டும். தாமே அத்தேர்தலில் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கையில் இப்படி பேசுகின்றார் போலும் ரணில் விக்கிரமசிங்க. ஆனால் மக்கள் என்ன முடிவு எடுப்பார்கள் என்று இப்போது கூற முடியாது.

இன்றைய நிலையில் ஜனாதிபதி தேர்தலையும், அதன் பின்னர் பொதுத் தேர்தலையோ அல்லது மாகாண சபைத் தேர்தலையோ நடத்தும் அதிகாரம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்குமா என்பது தெளிவற்றது. அப்படிக் கிடைப்பது துர்லபமே. அவருக்கு நடத்தச் செய்வதற்கு அதிகாரமும் வாய்ப்புமுள்ள உள்ளூராட்சித் தேர்தலை அவர் நடத்த அனுமதிக்க போவதில்லை. எனவே எந்தத் தேர்தலும் ரணிலால் அறிவிக்கப்படுவதற்கு வாய்ப்பே இல்லை என்பதுதான் நிலைமை.

# பயங்கரவாத அரசு போல் செயற்படுகிறது இஸ்ரேல்

## ரிஷாத் எம்.பி. காட்டம்



காட்டுச் சட்டங்களை கையாளும் இஸ்ரேல், பயங்கரவாத அரசு போல செயற்படுகின்றது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற "காஸா – இஸ்ரேல் மோதல்" குறித்த விவாதத்தில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பலஸ்தீனர்களின் இருப்பை மறுத்துவரும் இஸ்ரேல் அரசு, காஸா மக்களைக் காட்டுமிராண்டித்தனமாகக் கொன்று குவிக்கின்றது. பல நாட்களாக இடம்பெறும் மோதலில், காஸாவில் மாத்திரம் நாலாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில், 1,200 பேர் குழந்தைகளாவர். பெண்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், முதியோர்களென இஸ்ரேலின் கொலைத்தாண்டவம் தலைவிரித்தாடுகின்றது.

12 வருடங்களாக குழந்தையின்றி நான்கு பிள்ளைகளைப் பெற்றவரும் பலியெடுக்கப்பட்டுள்ளார். இடிபாடுகளுக்குள் சிக்கித் தவிப்போர் இறுதி மூச்சுக்களை எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அப்பாவிகள் சிகிச்சை பெற்றுவந்த வைத்தியசாலையிலும் யூத இராணுவம் குண்டுகளை வீசியுள்ளது. ஐநூறுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதற்காக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் ருவிட்டர் செய்தியில் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். பின்னர் அந்தப் பதிவை நீக்கியுள்ளதாக ஐ.நாவுக்கான பலஸ்தீன தூதுவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலிலிருந்த வேளையிலேயே, இவ்வைத்தியசாலை தாக்கப்பட்டது. நீரின்றி, மின்சாரமின்றி, உணவின்றி, தாகம், பசி, இருட்டுக்குள் உயிர்தப்பியோடும் காஸாவின் அவலங்கள், ஜோ பைடனின் கல்நெஞ்சை கசிய வைக்கவே இல்லை. ஸியோனிஸவாதிகளின் இக்கொடூரங்களில் ஐரோப்பாவும் குளிர்காய்கிறது.

இவ்விடயத்தில் இலங்கை அரசு 'விழுந்தாலும் மீசையில் மண்படாதது' போன்று நடந்துகொள்கின்றது. இஸ்ரேலில், வெறும் 1200 பேரளவிலான இலங்கையர்கள்தான் பணியாற்றுகின்றனர். இதற்காகவா இந்த மெத்தனப் போக்கு? ஆனால், அரபு நாடுகளில் இலட்சக்கணக்கில் இலங்கையர்கள் பணியாற்றுகின்றனர். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது அரபு நாடுகளிலிருந்தே அதிகளவு உதவிகள் வந்தன. எரிபொருளுக்காக 750 மில்லியன் டொலரை ஈரானே வழங்கியது. இதையெல்லாம் எண்ணாமல், யூத இராணுவத்தின் இனச்சுத்திகரிப்புடன் இணங்கிச்செல்லும் மேற்குலகின் நிழலிலே அரசு செல்கின்றது. மனிதநேயம் மரித்துப்போன ஐரோப்பா மற்றும் ஏகாதிபத்தியத்தில் திளைத்துள்ள அமெரிக்கா என்பன முஸ்லிம்களுக்கு நியாயம் தரப்போவதுமில்லை. எனவே, முஸ்லிம்கள் ஒன்றுபட்டு நியாயங்களைத் தட்டிக்கேட்க வேண்டும்." – என்றார்.

# 65 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுப்பு



சீரற்ற காலநிலை காரணமாக 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பதுளை, காலி, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, நுவரெலியா, கேகாலை, குருநாகல், மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்டங்களில் உள்ள 65 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு இன்று பிற்பகல் 03 மணி வரைக்கு உரியதாகும்.

# சிரேஷ்ட பிரஜைகளுக்காக புதிய நிதி நிவாரண வசதி!

அறுபது வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்காக புதிய நிதி நிவாரணம் ஒன்றை உள்நாட்டு இறை வரித் திணைக்களம் அறிமுகப்படுத் தியுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக் களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கி அல்லது நிதி நிறுவனத்தி னால் 05 சதவீதத்தினால் கழிக்கப் பட்ட முற்பண வருமான வரியின் மீள ளிப்பினை வழங்கும் முறை ஒன்றிசி மத்திய வங்கி அறிமுகப்படுத்தியுள் ளது.

அறுபது வயது அல்லது அதற்கு கூடுதலான வயதுடைய மற்றும் வரு டாந்த வருமானம் 12 லட்சம் ரூபாவி ற்கும் அதிகரிக்காத சிரேஷ்ட பிரஜைகள் மீளளிப்பினை பெற தகுதியுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரஜைகள் காலாண்டுக்கு 25 ஆயிரம் ரூபாவினை மீளளிப் பாகக் கோர முடியும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

# கிணற்றில் வீழ்ந்து தாயும் மகளும் சாவு

வாரியபொல வல்பொல பிரதே சத்தில் வசிக்கும் 6 வயதான மக ளும் அவரது தாயும் வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றில் வீழ்ந்து உயிரிழந் துள்ளனர் என வாரியபொல பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன் தினம் வீட்டுக்கு அருகிலுள்ள கிணற் றில் குளிப்பதற்கு சென்ற வேளை யிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற் றதாக அயலவர்கள் தெரிவிக்கின்ற னர்.

கிணற்றில் வீழ்ந்த சிறுமியைக் காப்பாற்ற தாய் கிணற்றில் குதித்திருக் கலாம் என பொலிஸார் சந்தேகிக் கின்றனர்.

சிறுமியின் தந்தை கடற்படையில் பணிபுரிகிறார் எனவும் அவர் தூர மாகா ணத்தில் இருப்பதால் தாயும் மகளுமே மட்டுமே வீட்டில் தங்கியிருந்தனர் என வும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

## மின்சார சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாதங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட்ட மின் கட்டணத்தை, இனிமேல் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை திருத்து வதற்கான பொறிமுறையொன்று தயா ரிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப் பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கை யில்,

“மின் கட்டணத் திருத்தத்துக்குப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வால் கடந்த வாரம் மின்சார சபைக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி, ஒக்டோபர் 21 ஆம் திகதி முதல்,எதிர் வரும் சில மாதங்களுக்கு தற்போதுள்ள மின் கட்டணத்தை சுமார் 18 சதவீதத்தால் அதிகரித்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், இந்தக் கட்டண மறுசீரமைப்பு தொடர்பில் அரசு கொள்கை ரீதியான முடிவை எட்டியது. எந்தவொரு அரச நிறுவனமும் திறைசேரியின் ஊடாக பணத்தைப் பெற்று அதன் நட்டத்தை ஈடுகட்ட முடியாது. அதன்படியே, மின்சார சபைக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாப னத்துக்கும் விசேட விலைச் சூத்திரம் தயாரிக்கப்பட்டது.

மின்சார சபை மின் கட்டணத்தை ஒரு வருடத்தில் இரண்டு முறை மட்டுமே திருத் தம் செய்ய முடியும் என்ற தவறான கருத்து மக்கள் மத்தியில் உள்ளது. ஆனால், அவசர நிலைமையில் மின் கட்டணத் திருத்தத்தைக் கோரும் உரிமை மின்சார சபைக்கு உள்ளது. அதற்கு அமைச்சரவை யும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அந்த முறையைப் பயன்படுத்தியே இந்தத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான சட்ட மூலம், சட்ட வரைஞர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞர் அலுவலகம் அதனை ஆய்வு செய்த பின்னர் அதனை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது. அதற்கான பணிகளை இந்த வாரத்தில் முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாகக் கடந்த செவ்வாய்கிழமை சட்டமா அதிபர் எனக்கு அறிவித்தார். அதன் பின்னர் அடுத்த வாரம் மறுசீரமைப்பு குறித்த சட்ட மூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப் படும்.

தற்போது மழைவீழ்ச்சி அதிகமாக உள்ளதால் இந்தக் கட்டணத் திருத்தம் தேவையா? என்று பலர் கேள்வி எழுப்பு கின்றனர். ஆனால், நான் பிரதிநிதித் துவப்படுத்தும் மாத்தறை மாவட்டம் உட்பட காலி மற்றும் கம்பஹா மாவட்டங்கள் என்பன அதிக மழை காரணமாக வெள்ள நிலைமையை எதிர்கொண்டன. ஆனால், நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் சமனலவெவ, விக்டோரியா மற்றும் ரந் தெனிகல ஆகிய பிரதான நீர்த்தேக்கங்கள் உள்ள பிரதேசங்களில் வழமையான மழைவீழ்ச்சியை இம்முறை நாங்கள் காணவில்லை.

இன்றைய நிலவரப்படி, நமது நீர்த் தேக்கங்களின் கொள்ளளவில் 65.81 வீதம் மட்டுமே மின் உற்பத்திக்காகப் பயன்படுத்த முடியுமாக உள்ளது. கடந்த வருடங்களுடன் அதனை ஒப்பிட்டுப் பார்த் தால், 2022 ஒக்டோபர் 22 ஆம் திகதி, அப்போது நீர்த்தேக்கங்களின் அளவு 84.41 வீதமாக இருந்தது. அதன்படி, நீர்த் தேக்கங்களின் நீர் கொள்ளளவில் சுமார் 20 வீத வித்தியாசம் உள்ளது.

மேலும், 2022ஆம் ஆண்டு நமது நீர்த்தேக்கங்களில் இருந்து 5364 ஜிகாவோட் மணிநேர நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில், 5639 ஜிகாவோட் மணிநேர நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆண்டு ஒக்டோபர் 22ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 893 ஜிகாவோட் மாத்திரமே உற்பத்தி செய்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டு களுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட ஜிகாவோட் அளவு அரைவாசிதான். அதன்படி, இந்த ஆண்டு நிறைவடைய இன்னும் 70 நாள்கள் மாத் திரமே உள்ளன.

தற்போது அந்தப் பகுதிகளில் மழை பெய்து வந்தாலும், இன்னும் அந்த இலக்கை அடைய முடியவில்லை. அதன் படி, எஞ்சிய மின்சாரத் தேவையை மாற்று வழிகள் மூலம் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.” – என்றார்.

# பலஸ்தீனரின் சுதந்திரத்திற்கான ஆதரவை உறுதி செய்து புளொட் அமைப்பு அறிக்கை



பலஸ்தீன தேசத்தின் மீது, அங்குள்ள பொதுமக்களின் நிலைகள் மீது, இஸ்ரேல் தொடர்ச்சியாக நடாத்தி வரும் கனரக படைக் கருவிகளிலான தாக்குதல்களை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) வன்மையாகக் கண்டிப்பதோடு பலஸ்தீன தேசத்து மக்களின் சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு தொடர்ச்சியான எமது ஆதரவையும் உறுதிப்படுத்திக் கொள்கிறது.

– இவ்வாறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) அமைப்பின் ஊடகப் பிரிவு கடந்த 21 ஆம் திகதியிட்டு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:–

பலஸ்தீன தேசத்தின் ஒரு பகுதியாயினும், பலஸ்தீன அதிகார சபையின் ஆளுகைக்குட்படா காசாப் பிரதேசத்தில் இருந்து கடந்த ஏழாம் திகதி ஹமாஸ் அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலை காரணம் காட்டி, பலஸ்தீன மக்கள் அனைவரையும் காவு கொள்ளும் கொடூரமான தாக்குதல்களையும், வாழ்வாதாரத் தடைகளையும் செயற்படுத்த முனையும் இஸ்ரேலின் நோக்கம் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். ஹமாஸ் அமைப்பினால் பிடிக்கப்பட்ட பணயக் கைதிகள் விடுவிக்கப்படும் வரை உணவு மற்றும் மருந்து விநியோகங்களை தடை செய்து பலஸ்தீன மக்களை அடிபணிய வைக்க எத்தனித்த இஸ்ரேல் பல்வேறு புற அழுத்தங்களினால் தற்போது நட்பு நாடான எகிப்து ஊடாக மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம் நடக்க அனுமதித்துள்ளது.

ஓர் இஸ்ரேலியர் காயப்படுத்தப்பட்டால் பதிலுக்கு பல பலஸ்தீனியர்களின் உயிர்களைக் காவுகொள்ளும் கொள்கையை நடைமுறைப்படுத்தி பலஸ்தீன மக்களுக்கு அச்சத்தையும் இஸ்ரேலிய மக்களுக்கு அதீத நம்பிக்கையையும் கொடுத்து வைத்திருந்த இஸ்ரேலின் புலனாய்வில் ஏற்பட்டுள்ள தோல்விக்கு ஒட்டுமொத்த பலஸ்தீன மக்களைப் பலிக்கடாவாக்கும் நோக்கத்தை அனுமதிக்க முடியாது.

மேற்குக் கரையில் ஆட்சியை வைத்திருக்கும் முகமட் அப்பாஸ் தலைமையிலான பலஸ்தீன அதிகார சபை 1960களில் உலக நாடுகளால் இணக்கம் காணப்பட்டிருந்த ‘இரு நாடு’ எனும் தீர்வை ஏற்றுக் கொண்டிருந்தாலும், காஸாவின் ஆட்சியை வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை இஸ்ரேல் நடைமுறையில் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

காஸாவில் உள்ள ஹமாஸ் அமைப்பு உறுப்பினர்களை முற்றாக அழிப்பதென்பது காஸாவில் உள்ள அனைத்து பலஸ்தீன மக்களையும் படுகொலை செய்வதன் மூலமே சாத்தியமாகும். அத்துடன் ஹமாஸ் அமைப்பினரை அழித்தொழிக்க கங்கணம் கட்டி நிற்கும் இஸ்ரேல், ஏழாம் திகதித் தாக்குதலில் சம்பந்தப்பட்டிராத மேற்குக்கரையின் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் படைப்பலத்தை பிரயோகித்து தாக்குதல்களை நடாத்தி நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்களைக் கொன்று வருகிறது.

பலஸ்தீன தேசமானது, 2012.11.29 அன்று ஐ.நா. சபையின் 67/19 இலக்க தீர்மானத்தின் பிரகாரம் ‘பார்வையாளர் நாடு’ எனும் வகையில் 127 உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2016.03.24 அன்று, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பதினான்கு நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், பலஸ்தீனப் பிராந்தியத்தில் இஸ்ரேலியக் குடியேற்றங்கள் நிறுவப்படுவது தடை செய்யப்படுகிறது. பதினைந்தாவது நாடான அமெரிக்கா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இத்தனை ஏற்பாடுகளும் உலகின் உச்ச சபையில் இருந்தும்கூட, மொசப்பத்தேமிய நாகரீகத்தின் தொட்டில் என குறிப்பிடப்படும் மேற்படி பிராந்தியத்தின் உரித்தாளர்களில் ஒரு பகுதியினரான பலஸ்தீன மக்கள் மீது 1948 ஆம் ஆண்டில் நேச நாடுகளால் புதிதாக, பலவந்தமாக சிருஷ்டிக்கப்பட்ட இஸ்ரேலின் ஆக்கிரமிப்பும் அடாவடித்தனங்களும் நிறுத்தப்பட முடியாமல் இருக்கின்றன.

தன்னிடம் உதவி கேட்கும் நாடுகளுக்கு மனித உரிமை நில்சிவரங்களை நிபந்தனையாக்கும் மேற்குலகமும், உலக நாடுகளின் பொது அமைப்பான ஐ.நா வும் இஸ்ரேலின் மனித உரிமை மீறல்களை, பொதுமக்கள் மீதான படுகொலைகளை, யுத்தக் குற்றங்களை கண்டு கொள்ளாமலிருப்பதுடன் அதன் செயற்பாடுகளை நியாயப்படுத்திக் கொண்டிருப்பதனை நாமும் எம் வரலாற்றுடன் ஒப்பிட்டு உணர்ந்து கொள்ள வேண்டும்.

2009 இல் வன்னியின் கிழக்கு கரையில் சிறு நிலப்பரப்பில் அடைபட்ட நிலையில் இருந்த மக்கள், புலிகளைக் காரணம் காட்டி ஆயிரக்கணக்கில் கொன்றொழிக்கப்பட அனுமதிக்கப்பட்டதைப் போலவே இன்று பலஸ்தீனத்திலும் ஹமாஸைக் காரணம் காட்டி அங்குள்ள மக்கள் கொல்லப்படுகின்றனர்.

மறைந்த பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் அவர்களின் தலைமையில் பலஸ்தீன விடுதலை இயக்கமும் அதன் அங்கத்துவப் போராளிகள் அமைப்புகளும் சுதந்திர பலஸ்தீனத்திற்காக போரிட்ட போது அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அனுபவங்களைக் கொண்டிருந்தவர்கள் நாங்கள். அன்று பலஸ்தீன மக்களின் போராட்டம் மதங்களைக் கடந்து, தேசத்தின் விடுதலையையே இலக்காகக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் பெரும்பாலான பலஸ்தீனர்களும் கணிசமானளவு இஸ்ரேலியர்களும் கூட இரு நாடுகள் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களாகவே இருந்தனர்.

(09ஆம் பக்கம் பார்க்க)




# பலாலி விமான நிலையத்தின் வசதிகள் மேம்படுத்தப்படுமாம்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

விமான சேவைகளின் தேவைகள் அதிகரித்துள்ளமையால் இலங்கையின் சிறிய விமான நிலையங்களை மேம்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பலாலி சர்வதேச விமான நிலையத்தில் தற்போதுள்ள பயணிகள் முனையத்தை விரிவுபடுத்துதல், சுங்கத் தீர்வையற்ற கடைத் தொகுதியை ஸ்தாபித்தல், சுகாதார வசதிகளை அதிகரித்தல், குடிவரவு மற்றும் சுங்க அதிகாரிகளுக்கான வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளை அதிகரித்தல் உள்ளிட்ட பயணிகள் வசதிகள் விரிவுபடுத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் விமான சேவைகள் அதிகரிப்பதன் காரணமாக பலாலி விமான நிலையத்திற்கு வரும் மற்றும் புறப்படும் பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்காக 20கோடி ரூபா மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து பலாலிக்குத் தினமும் விமான சேவைகள் இடம்பெறுகின்றன. 60 பயணிகள் பயணிக்கும் வகையிலான விமானங்களே பலாலிக்கு இயக்கப்படுகின்றன.

பலாலிக்கு சர்வதேச விமானங்கள் தவிர, உள்நாட்டு விமானங்களும் இயக்கப்படுகின்றன.

# பலஸ்தீனரின் சுதந்திரத்திற்கான ஆதரவை உறுதி செய்து புளொட் அமைப்பு அறிக்கை

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இன்று, மேற்குலக நாடுகளின் ஆதிக்க உணர்வும் பொருளாதார நலன்களும் அதற்கெதிரான பிராந்திய சக்திகளின் அதிகார முனைப்புகளும் பலஸ்தீன தேசத்தை சிதைத்து குறுக்கி விட்டதோடு, அம் மக்களின் சுதந்திரப் போராட்டமும் அடிப்படைவாதப் போராட்டம் போல அணுகப்படுகிறது. முற்போக்கு சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கொண்டிருந்த பலஸ்தீன சக்திகள் பிராந்திய போட்டிச் சுழியில் சிக்கி கடும்போக்கு இஸ்லாமிய அமைப்புகளுடன் இணங்கி, இணைந்து செயற்படும் நிலைக்கு சென்று விட்டன.

சமாதான வலைக்குள் பலஸ்தீன அதிகார சபையை சிக்க வைத்து இஸ்ரேலிற்குப் பலத்தையும், பலஸ்தீனத்திற்கு வெறும் பார்வையாளர் தகுதியையும் வழங்கி, எழுச்சி கண்டு வந்த ‘இன்பாடிடா’ போராட்டத்தை மழுங்கடித்த நோர்வே நாட்டு மத்தியஸ்துவம் குறித்து பலஸ்தீனத் தலைவர் அரபாத் அவர்கள் அன்று ஈழப் போராளிகளுக்கு விடுத்திருந்த எச்சரிக்கைக் குறிப்பை நாம் இன்று மட்டுமல்ல என்றும் நினைவிற் கொள்ளவேண்டும்.

பலஸ்தீன மக்களை விரட்டியும் பலஸ்தீனப் பிரதேசங்களை ஊடறுத்தும் உருவாக்கப்பட்ட இஸ்ரேலியக் குடியேற்றங்கள் விலக்கப்பட்டு குறைந்த பட்சம் 1967 இல் உலக நாடுகளால் இணக்கம் காணப்பட்ட எல்லைக் கோட்டுக்கு இஸ்ரேலியப் படைகள் மீள அழைக்கப்பட்டு உருவாக்கப்படக் கூடிய ‘இரு நாடுகள்’ தீர்வே பலஸ்தீனத்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும். கூடவே இஸ்ரேலிய மக்களுக்கு பாதுகாப்பையும் நிம்மதியையும் கொடுக்கும்.

பலஸ்தீன மக்களுக்கெதிரான இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பு வடிவங்களையே இஸ்ரேலுடன் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்த அன்றைய ஜே.ஆர். அரசு



தமிழர் தாயகத்தில் நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. குடியேற்றங்களை நிறுவுதல், தேசத்தை துண்டாக்குதல், பண்பாட்டினை மாற்றியமைத்தல், குடிப்பரம்பலை மாற்றியமைத்தல் என அனைத்தையும் படைபலத்தின் துணையுடன் நிறைவேற்றிக் கொண்டது. இன்று வரை அது தொடர்ந்து கொண்டே வருகிறது.

ஏறக்குறைய நூறாண்டுகளாக ஆக்கிரமிப்பாளனின், ஆயுதக் குழுக்களுக்கும் கட்டமைக்கப்பட்ட படைகளுக்கும் எதிராக விடாது போராடும் பலஸ்தீன மக்கள் தமது போராட்டத்தின் நியாயங்களை தாற்பரியங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கடத்தவும் தவறவில்லை. பலஸ்தீன மக்களின் போராட்டத்துடன் ஒத்த பரிணாமங்களைக் கொண்டிருக்கும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு இவையெல்லாம் படிப்பினைகளே.

பலஸ்தீன மக்களினது, அவர்களது தேசத்தினது சுதந்திற்கான நியாயமான தீர்வுக்காக நாம் என்றும் அவர்களுடன் உறுதியாய் நிற்போம் – என்று உள்ளது.

# இந்தியாவை அடுத்த 25 ஆண்டுகளில் வளர்ச்சி பெற்ற நாடாக மாற்ற வேண்டும்!

## மாணவர்களிடம் பிரதமர் மோடி தெரிவிப்பு



அடுத்த 25 ஆண்டுகளில் இந்தியாவை வளர்ச்சி பெற்ற நாடாக மாற்ற மாணவர்கள் உதவ வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

சட்டப் பேரவை தேர்தல் நடைபெறவுள்ள மத்திய பிரதேச மாநிலத்தில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே பிரதமர் மோடி இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது நாட்டின் இளைஞர் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. நமது பாரத நாடு நினைத்தால் முடியாதது எதுவுமில்லை. குவாலியர் நகரில் உள்ள மாணவர்களுக்கு முழுமையான கல்வியை சிந்தியா பள்ளி வழங்கி வருகிறது.

நாம் நினைத்தால் முடியாதது எதுவுமில்லை. நமது நாடு வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. அடுத்த 25 ஆண்டுகளில் நமது நாட்டை வளர்ச்சி பெற்ற நாடாக மாற்ற மாணவர்கள் உதவ வேண்டும். இதற்கான முயற்சியில் மாணவச் செல்வங்கள் ஈடுபடவேண்டும்.

தரமான கல்வி பயிலும் மாணவர்கள் நமது நாட்டின் எதிர்காலச் செல்வங்கள் என்பதை அனைவரும் அறிவர்.

நாட்டின் நலனை மனதில்நிறுத்தி பயிலும் அவர்கள் நாடுவளம் பெற வளமான வழியைக் காட்டுவார்கள். இளைஞர்கள் மீதும், அவர்களது செயல் திறன்கள் மீதும் நான் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

அடுத்த 25 ஆண்டுகளில் நாடு வளமான நாடாகவும், வளர்ச்சி பெற்ற நாடாகவும் மாற தீர்மானம் செய்துள்ளோம்.

நமது நாடு எடுத்துள்ள தீர்மானத்தை இளைஞர்கள் நிறைவேற்றுவார்கள் என நம்புகிறேன். அடுத்த 25 ஆண்டுகள் இந்தியாவைப் போலவே மாணவர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தவை. சிந்தியா பள்ளியின் ஒவ்வொரு மாணவரும் வளர்ந்த இந்தியா என்ற இலக்கை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

எனவே, மாணவச் செல்வங்கள் இன்று முதல் ஒரு தீர்மானத்தை மனதில் கொண்டு அதை நோக்கி செயல்பட வேண்டும். எடுத்த காரியத்தை முடிப்போம் என்ற மன உறுதியுடன் மாணவர்கள் நடக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் தி.மு.க. பொறுப்பை தட்டிக் கழிக்கிறது!

## - அன்புமணி ராமதாஸ் குற்றச்சாட்டு

மாநில சுயாட்சி பேசும் தி.மு.க. அரசு, உச்ச நீதிமன்ற உத்தரவு இருந்தும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் மத்திய அரசை கைகாட்டி தனது பொறுப்பை தட்டிக் கழிக்கிறது என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

சிவகாசியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அன்புமணி ராமதாஸ் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசின் தூண்டுதலில் கடற்கொள்ளையர்கள் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். மீனவர்கள் விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

கன்னியாகுமரியில் இருந்த ஆளும் கட்சியினர் உதவியுடன் கனிம வளங்கள் அள்ளப்பட்டு கேரளா வுக்கு கடத்தப்படுகிறது. இதை அரசு தடுக்கவில்லை என்றால் எனது தலைமையில் மிகப் பெரிய போராட்டம் நடத்தப்படும்.



தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பை தமிழக அரசு நடத்த வேண்டும். கடந்த சில நாட்களுக்கு முன் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க மத்திய அரசுக்கு தான் அதிகாரம் உள்ளது. அதனால் வருகின்ற மக்கள் தொகை கணக்கெடுப்பு உடன் சாதிவாரி கணக்கெடுப்பையும் கூடுதலாக நடத்த வேண்டும் என முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழகத்தில் மட்டும் தான் 68 சதவீதம் இடஒதுக்கீடு உள்ளது. இதை பாதுகாக்க தமிழக அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். 69 சதவீத இடஒதுக்கீடு தொடர்பான வழக்கில் தமிழக அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என கடந்த 2012 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

13 கோடி மக்கள் தொகை கொண்ட பிஹாரில் 45 நாட்களில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி மாநில அரசு முடிவை வெளியிட்டுள்ளது.

ஆனால், சமூக நீதி பேசும் தி.மு.க. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மறுக்கிறது. மாநில சுயாட்சி பேசும் தி.மு.க. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் அதிகாரத்தை தட்டிக் கழிக்கிறது.

சாதிவாரி கணக்கெடுப்பு என்பது வெறும் எண்ணிக்கை மட்டும் அல்ல. சமூக நிலை, பொருளாதாரம், கல்வி, வேளாண்மை உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட குறியீடுகளை கணக்கெடுக்க வேண்டும். தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முதல்வர் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலில் ஐ.நா. பணியாளர்கள் 29 பேர் பலி!



இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலில் இதுவரை, காசாவில் பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பை சேர்ந்த 29 பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த விடயத்தினை பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா.வின் நிவாரண மற்றும் பணிகளுக்கான அமைப்பு தன்னுடைய சமூக வலைத்தள பதிவில் வெளியிட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் 50 சத வீதத்தினர் ஆசிரியர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாங்கள் அதிர்ச்சி அடைகிறோம். எங்கள் வேதனைகளை ஒருவருக்கொருவர் மற்றும் குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்கிறோம் என ஐ.நா.வின் நிவாரண மற்றும் பணிகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐ.நா.வின் இந்த அமைப்பானது பாலஸ்தீன அகதிகளுக்கான நிவாரணம் மற்றும் மனித வளர்ச்சிக்கு உறுதுணையாக செயல்பட்டு வந்துள்ளது. இது குறித்து உலக சுகாதார அமைப் பின் இயக்குநர் ஜெனரல் டெட்ராஸ் அதானம் கெப்ரியேசஸ் கவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன், உடனடியாக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும் என வேண்டுகோளும் விடுத்துள்ளார்.

# நேருக்கு நேர் மோதிய ரயில்கள்: பங்களாதேஷில் பாரிய விபத்து!

பங்களாதேஷில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்துள்ளனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இந்த விபத்தில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு கள் இருக்கிறது என அந்த நாட்டு சுகாதாரத்துறை அச்சம் வெளியிட்டுள்ளது.

பங்களாதேஷின் டாக்கா மாகாணத்தின் கிஷோர்கஞ்ச் மாவடத்தில் இருந்து டாக்கா நோக்கி சென்று கொண்டிருந்த இகரொசிந்தூர் அதிவேக ரயில், பயணத்தை ஆரம்பித்த சில நிமிடங்களில் மாற்று தண்டவாள பாதைக்காக மாற்றப்பட்டுள்ளது.

இதன்போது அந்த ரயில் தண்டவாளம் மாறிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், திடீரென வேகமாக வந்த மற்றொரு ரயில் அதன் மீது மோதியதில் இந்த பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.



இந்த விபத்தில் அதிவேக ரயிலின் பெட்டிகள் தடம்புரண்டன.

இதன் காரணமாக அந்த ரயிலில் பயணம் செய்தவர்களில் இதுவரை 15 பேர் உயி ரிழந்தனர் எனவும் கூறப்படுகிறது.




# மிகப் பலவீனமான ஜனாதிபதி ரணில் மனோ கணேசன் எம்.பி. யாழில் சாடல்

- எஸ்.நிதர்ஷன் -

நாட்டில் பலவீனமான ஒருவர் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க உள்ளார் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் விமர்சித்துள்ளார்.

தன்னுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தவோ அல்லது தனது வாக்குறுதியை நிறைவேற்றவோ அல்லது தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்தவோ முடியாத நிலையிலே ஜனாதிபதி இருக்கிறார் எனவும் சுட்டிக்காட்டியுள்ள மனோ கணேசன், இப்போது எதனையும் செய்ய முடியாவிட்டால் உடனடியாக தேர்லுக்கு செல்ல வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உறுதியான எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியாது. இருந்தும் அவர் எடுக்கின்ற சில தீர்மானங்களை கூட அவரால் நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு மயிலத்தமடு மேச்சல் தரை விவகாரத்தில் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடைசியாக ஒரு வாக்குறுதி ஒன்றை வழங்கி இருந்தார். ஆனால் அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

ஆக, தான் சொன்னதைத் தானே செய்ய முடியாமல் இருக்கிறார் என்றால், அவர் ஏன், எதற்காக ஜனாதிபதியாக இருக்கிறாரோ தெரியவில்லை. அதே நேரத்தில் அவரிடம் அதிகாரங்கள் இருப்பதாகவும் தெரியவில்லை.

குறிப்பாக புதிய பொலிஸ்மா அதிபர் நியமனத்திலும் கூட பல்வேறு இழுபறி நிலைமைகள் காணப்படுகின்றன. அதிலும் ஜனாதிபதி தான் ஒருவரை நியமிக்க உத்தேசித்துள்ள நிலையில் பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் வேறு ஒருவரை நியமிக்கப் பரிந்துரைத்திருக்கின்றார்.

இவ்வாறு இருவரும் வேறு வேறு நபர்களை நியமிக்க தீர்மானித்துள்ளமையால் இறுதியாக யாரை நியமிப்பது என்பதில் சரியான, உறுதியான தீர்மானத்தை எடுக்க முடியாத நிலை உள்ளது.

இவ்வாறு வேறு வேறு நபர்களை நியமிக்க தீர்மானித்திருப்பதால் ஜனாதிபதிக்கும் பொலிஸ்துறை அமைச்சருக்கிடையிலும் முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதனால் எதனையும் செய்ய முடியாமல் இருக்கின்ற நிலைமை ஏற்பட்டு உள்ளது.

ஆகவே ஒன்றில் ஜனாதிபதி தான் விரும்புபவரை நியமித்துவிட்டு அமைச்சரை மாற்றியிருக்க வேண்டும். அல்லது அமைச்சர் சொல்பவரை நியமிக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்றைத்தான் ஜனாதிபதி இப்போது செய்ய வேண்டும்.

இப்படி ஏதனையும் செய்யாமல் இருப்பது என்பது ஒரு பலவீனமான ஜனாதிபதி என்பதைத்தான் பார்க்கக் கூடியதாக உள்ளது. உண்மையில் ரணில் விக்கிரமசிங்க ஒரு பலவீனமான ஜனாதிபதியாகத்தான் இருக்கிறார். ஏனெனில் அவரால் எதுவும் செய்ய முடியாமல் உள்ளது.

இதுதான் மயிலத்தமடுவிலும் நடந்தது. இப்போது பொலிஸ்மா அதிபர் நியமனத்திலும் நடக்கிறது. இதே போலத் தான் அவருடைய திணைக்களமான தொல்பொருள் தொடர்பிலும் மிக பிரமாண்ட கூட்டத்தை நடத்தி வாய்ச்சவாடல் காட்டியிருந்தார்.

அவருடைய அந்த வாய்சவாடல் உலகம் முழுவதும் உள்ள இலட்சக் கணக்கானோரால் சமூக வலைத் தளங்களில் பார்க்கப்பட்டது. அதன் பிறகு என்ன நடந்தது என்று பார்க்கிற போது அந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தானாக இராஜினாமாச் செய்தார். ஆனால் ஜனாதிபதியின் கட்டளையோ பணிப்புரையோ அமுலாக வில்லை. இது தான் உண்மை. ஆகவே ஜனாதிபதியின் அறிவிப்புக்கள் அல்லது தீர்மானங்கள், வாக்குறுதிகள் என்பன ஒரே ஏமாற்றாகவே உள்ளன.

ஆகவே ஜனாதிபதி ஜனாதிபதி தான் சொன்னதை நிறைவேற்ற அதிகாரங்கள் இருந்தால் அதனை நிறைவேற்ற வேண்டும். தன்னுடைய அதிகாரங்களைப் பயன்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். அவ்வாறு தீர்வை வழங்க முடியாவிட்டால் தேல்தல்களுக்கு செல்ல வேண்டும் எனக் கோருகிறோம். – என்றார்.

# புதிய நுளம்பு வகை நாட்டில் அடையாளம்

தவளைகளின் இரத்தத்தை மாத்திரம் உறிஞ்சும் புதிய நுளம்பு வகை ஒன்று நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளது என வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

மீரிகம – ஹந்துருமுல்ல பகுதியில் இந்த நுளம்பு வகை அடையாளம் காணப்பட்டுள்ளது என ஸ்தாபனத்தின் பூச்சியியல் விஞ்ஞானப் பிரிவின் பூச்சியியல் விஞ்ஞான அதிகாரி கயான் ஸ்ரீகுமாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள நுளம்பு வகைகளின் எண்ணிக்கை 156 ஆக உயர்வடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.



## ஜனாதிபதி மற்றுமொரு நாடகத்தை அரங்கேற்றுகின்றார்!

# ஸ்மார்ட் நாட்டை உருவாக்குவதற்குப் பதிலாக ஜில்மால் நாட்டை உருவாக்குகிறது அரசாங்கம்



"தமது வேடிக்கைத்தனமான அதிகார அரசியலின் புதிய நாடகத்தை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அரங்கேற்றியுள்ளது. அமைச்சரவையினுள் நடத்திய அபூர்வமான நபர்களிடையிலான மாற்றமே இந்த நாடகமாகும்.

"எதிர்க்கட்சியும் நாட்டு மக்களும் தொடர்ந்து தோல்வியடைந்தாக கூறிய சுகாதார அமைச்சரிடம் சுற்றாடல் அமைச்சை ஜனாதிபதி கையளித்துள்ளனர்.

"உண்மையில் ஸ்மார்ட் நாட்டை உருவாக்குவதற்கு பதிலாக ஜில்மால் நாட்டை உருவாக்குவதுதான் நடந்து வருகின்றது.

– இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

"ஜனாதிபதி உருவாக்க முயற்சிக்கும் ஸ்மார்ட் நாட்டின் வடிவம் இதுதானா என்று நாம் கேள்வி எழுப்புகிறோம்.

மாற்றத்தை தன்னில் இருந்து ஆரம்பிப்பார் என்று கூறிய ஜனாதிபதி காண்பித்துள்ள வேடிக்கையான முன்னுதாரனம் புதுமையானதாகும்.



சுகாதார அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல்லவின் செயற்பாடுகள் தோல்வியடைந்தமையால்,நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்த போது அரசாங்கம் ஒன்றிணைந்து அவரைப் பாதுகாத்தது.

நாட்டின் சுகாதாரத் துறை வீழ்ச்சியடைந்தாலும், அவரை நம்பி அவரைப் பாதுகாத்தார் என்று சொன்ன அதே சுகாதார அமைச்சர் இன்று ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்டு,113 பேரின் நம்பிக்கையை நிர்வாணமாக்கியுள்ளார்.

பசுமைப் பொருளாதாரம், பசுமை அபிவிருத்தி போன்ற எண்ணக் கருக்கள் குறித்துப் பேசி, தான் சுற்றாடல் குறித்து மிகுந்த அக்கறை கொண்டுள்ளார் எனக் காட்ட முயற்சிக்கும் ஜனாதிபதி, சுகாதாரத்துறையை அழித்த கெஹலிய ரம்புக்வெல்லவை சுற்றாடல் அமைச்சராக நியமித்ததன் மூலம். சுகாதாரத் துறையின் சீரழிவைப் போன்று சுற்றாடலையும் சீரழியச் செய்வதற்கான வாய்ப்பைத் திறந்து கொடுத்துள்ளமை, அவரது கொள்கைகளின் நோக்கம் மக்களின் நலனையோ, சுற்றுச்சூழலின் நலனையோ பேனுவதை விடுத்து,தனது அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்கு மட்டுமே என்பதை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

சட்டவிரோதமான முறையில் மின் கட்டணத்தை அதிகரித்து, சுகாதாரத் துறை உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை அழிவிற்கிட்டுச் சென்று, தனது அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள. வெட்கக்கேடான செயல்களில் ஈடுபட்டு அரங்கேற்றும் வேடிக்கையான இந்த நாடகங்களையும் அரசியல் சூதாட்டங்களையும் நாட்டு மக்கள் இனி மேலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

தொடர்ந்தும் பொதுமக்களுக்கு அழுத்தம் கொடுத்து, குறுகிய நோக்கத்துடன், தன்னிச்சையான முடிவுகளை எடுத்து, சர்வாதிகார அரசாங்கமாக தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதாகக் கூறி. ஜனநாயக விரோதமாக கொண்டு செல்லும் இந்நிகழ்ச்சி நிரலை நிறுத்தி, உடனடியாக தேர்தலை நடத்துமாறு நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்." – இப்படி அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# எம்.பிக்களின் சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் முடிவு



நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான பிரேரணை நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.


கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வந்த பின்புலத்திலேயே நேற்று இந்த யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது அனைத்துக் கொடுப்பனவுகளும் உள்ளடங்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மூன்று லட்சம் வரை சம்பளத்தை பெறுகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தைஅதிகரிப்பதற்கானயோசனையொன்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்திலும் முன்மொழியப்பட்டது.

என்றாலும், அதற்கு அவர் அனுமதி அளிக்கவில்லை என்பதுடன், அந்த யோசனையை முற்றாக அவர் நிராகரித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது மீண்டும் இவ்வாறான யோசனையொன்று அமைச்சரவையில் முன்மொழியப்பட்டுள்ளது.



# ரணிலின் சீன விஜயம் குறித்து இரு நாடுகளும் கூட்டறிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தின் போது மேற்கொள்ளப் பட்ட முக்கிய தீர்மானங்கள் தொடர்பில் இருநாடுகளும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீன ஜனாதிபதி மற்றும் துணைப் பிரதமரைச் சந்தித்து விரிவான கலந்துரையாடல் களில் ஈடுபட்டார் என அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன - இலங்கை பாரம்பரிய நட்புறவு, பரஸ்பர ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் இந்த விஜயத்தின் போது பொதுவான புரிந்துணர்வு எட்டப் பட்டுள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்வான் சீன நிலத்திலிருந்து பிரிக் கப்பட முடியாத ஒரு பகுதி என ஏற்றுக் கொண்டு, ஒரே சீனா கொள்கைக் கான தனது அர்ப்பணிப்பை இலங்கை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நிலப்பரப்பிற்குள் சீனா விற்கு எதிரான பிரிவினைவாத செயற் பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் பட மாட்டாது என இலங்கை மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளது என அந்த அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, வர்த்தக மற்றும் பொரு ளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்து வதற்காக சுதந்திர வர்த்தக ஒப்பந் தங்களை மேற்கொள்ளவும் இருநாடு களும் இணங்கியுள்ளன என தெரி விக்கப்பட்டுள்ளது.



# நெல் சந்தைப்படுத்தல் சபையிலிருந்து ரூ.10 லட்சம் பெறுமதி நெல் காணோம்

நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஒரு தொகை நெல் கையிருப்பு காணா மல் போயுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல் களஞ்சியசாலைகளில் வைக் கப்பட்டிருந்த சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான நெல் காணாமல் போயுள்ளதாக நெல் சந்தைப்படுத் தல் சபையின் உள்ளக ஊழியர்கள் குழுவொன்று அமைச்சரிடம் முறைப் பாடு செய்துள்ளது.

இவ்வாறாக குருணாகல் மாவட்டத் தில் உள்ள ஐந்து நெல் களஞ்சிய சாலைகளில் இருப்புக்கள் காணாமல் போயுள்ளன.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பான முழுமையான அறிக் கையை மூன்று நாள்களுக்குள் வழங்கு மாறு சந்தைப்படுத்தல் சபைத் தலைவ ருக்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான அறிக்கை கிடைத்த வுடன் முழுமையான விசாரணைக்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் விடயம் ஒப்படைக்கப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித் துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.10.2023

## மேஷம்

இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள். உங்களிடம் வெற்றி பெறுவோம் என்ற உறுதி உள்ள காரணத்தால் நீங்கள் வெற்றியை எளிதில் அடைவீர்கள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். பொதுவான விஷயங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் சக பணியாளர்களிடம் ஒத்த உணர்வுகளை அனுபவிக்க இயலும்.

நீங்களும் உங்கள் துணையும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். ஆக்கப்பூர்வமான பேச்சு வார்த்தை காரணமாக உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

## ரிஷபம்

உங்கள் திறமைகளை வெளிபடுத்த உகந்த நாள். முக்கிய முடிவுகள் எடுக்க சிறந்த நாள். இன்றைய நாளை சிறப்பாக பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை தி-றமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிக்கு பலன் கிடைக்கும். நீங்கள் சிறப்புடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உறவில் காணப்படும் நல்ல புரிந்துணர்வே இதற்கு காரணம்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். இன்றைய நாளை சிறப்பாக திட்டமிட்டு முன்னேற வேண்டும்.

இன்று நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.

## மிதுனம்

எதிர்மறை எண்ணங்களை விலக்கி நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ள வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் உங்கள் இலக்குகளில் வெற்றி காணலாம்.

தவறான புரிந்துணர்வு காரணமாக சக பணியாளர்களுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்கள் பணியின் வளர்ச்சியை பாதிக்கும்.

தவறான புரிந்துணர்வு மற்றும் அபிப்ராயம் காரணமாக உங்கள் துணையுடன் அமைதியின்மை காணப்படும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை குடுபத்திற்கு செலவு செய்வீர்கள். இன்று கணிசமான தொகை இழப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

இன்று அஜீரணக் கோளாறு காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## கடகம்

இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ள-தால் புத்திசாலித்தனத்துடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளவேண்டும். பொறுமையும் உறுதியும் இன்று குறைந்து காணப்படும். இந்தப் பண்புகளை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.நீங்கள் பணியில் தவறுகள் செய்வீர்கள். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். கடுமையான செயல்கள் மற்றும் உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவில் நல்லிணக்கம் பராமரிக்க இயலாது.

அதிகரிக்கும் செலவுகள் கவலை அளிக்கும். நீங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவிட வேண்டும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.

## சிம்மம்

தொலை தூர நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அதிக பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் முயற்சிக்கு நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையின் அன்பைப் பெறுவீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. சில கடினமான சூழ்நிலைகள் காணப்பட்டாலும் நீங்கள் உற்சாகமான மன நிலையில் இருப்பீர்கள்.

## கன்னி

இன்று நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி நற்பலன் காணுங்கள்.

நீங்கள் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் புரிந்துணர்வு சக்தி மூலம் நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பீர்கள். உங்கள் சமயோஜித புத்தியும் நேர்மறை எண்ணங்களும் இந்தச் சூழ் நிலையை உருவாக்கித் தரும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். நீங்கள் இன்று உங்கள் குடும்ப நலனுக்காக செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் மன உறுதி காரணமாக நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## துலாம்

உங்கள் தினசரி செயல்களை மேற்கொள்வதில் சற்று எச்சரிக்கை தேவை. உங்கள் வெற்றிப் பாதையின் குறுக்கே பதட்டமும் ஏமாற்றமும் காணப்படும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக இன்று உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு செலவு செய்வீர்கள். அது வீண் செலவாக இருக்கும். திட்டமிட்டு கட்டுப்பாட்டுடன் செலவு செய்வது உதவிகரமாக இருக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை அதிகம் வருத்திக் கொள்ளாதிருக்க முயலுங்கள்.

## விருச்சிகம்

இன்று அதிக கவலையுடன் காணப்படுவீர்கள். உற்சாகமாக இருக்க முயலுங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை முடிப்பதற்கு கூடுதல் கவனம் தேவை. அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

இன்று நீங்கள் சகஜமான உறுதியான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்லுறவை அனுபவிக்க இயலும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியமாக இருக்க யோகா அல்லது உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.10.2023


தனுசு

சுய முயற்சி மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளை அடையலாம். எந்த செயலையும் நம்பிக்கையுடன் செய்யுங்கள்.

பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். கடின உழைப்பிற்கான பாராட்டு கிடைக்கும்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். இது மேலும் வளரும். உங்கள் துணை சம்பந்தமான இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் துடிப்புடனும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.


கும்பம்

இன்றைய முக்கியமான விஷயங்களை வேறு நாளைக்கு தள்ளிப் போடுங்கள். சுய முயற்சியில் நீங்கள் மனப் போராட்டங்களை சந்திப்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே உங்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரலாம்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு காணப்படாது. குடும்பப் பிரச்சினை காரணமாக தேவையற்ற மோதல்கள் ஏற்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

நீங்கள் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்படலாம்.


மகரம்


இன்று கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

பணிகள் அதிகமாக காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் அமைதியின்மையை உணர்வீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் கையில் அதிக பணம் காணப்படாது. மேலும் மருத்துவ செலவுகளை நீங்கள் மேற்கொள்ள நேரும்.

இன்று தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கார உணவுகளை தவிர்ப்பது நல்லது.


மீனம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பணிகளைக் கையாள்வது அவ்வளவு எளிதாக இருக்காது. இன்று சுமூகமான நாளாக இருக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் பணிகளை கவனமுடனும் நம்பிக்கையுடனும் மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இயலாது. இன்று உங்கள் நண்பர்களின் தவறான ஆலோசனை கேட்டு நடப்பீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence

S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546
JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327
077 336 6443 | 071 777 2377
021 567 5566 | 021 222 9581
021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park




## பாகிஸ்தான் - ஆப்கான் மோதலில்

# அதிர்ச்சி!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அதிர்ச்சியை அளித்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானை வீழ்த்தி இரண்டாவது வெற்றியைப் பெற்றது.

இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்துக்கான நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி, அந்த அணியின் தொடக்க வீரர்களாக இமாம் உல் ஹக்கும் அப்துல்லா சபீக்கும் களமிறங்கினர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 56 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், இமாம் உல் ஹக் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து சபீக் மற்றும் அணித்தலைவர் பாபர் அசாம் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

சிறப்பாக ஆடிய சபீக், 58 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். பின்னர் வந்த நட்சத்திர வீரர் முகமது ரிஸ்வான் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

சவுத் சகீல் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அணித்தலைவர் பாபர் அசாம் 74 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில் பிடியெடுப்பு மூலம் வெளியேறினார்.

இறுதியில் சதாப் கான் (40) மற்றும் இப்திகார் அகமது (40) ஆகியோரின் அதிரடியால் பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 282 ஓட்டங்களைச் சேர்த்தது.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 5 | 5 | 0 | 0 | 0 | 10 | 1.353 |
| 02 | நியூஸிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | 1.481 |
| 03 | தென்னாபிரிக்கா | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | 2.212 |
| 04 | அவுஸ்திரேலியா | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -0.193 |
| 05 | பாகிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.400 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.969 |
| 07 | பங்களாதேஷ் | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.784 |
| 08 | நெதர்லாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.790 |
| 09 | இலங்கை | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.048 |
| 10 | இங்கிலாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.248 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி

ஆப்கானிஸ்தான் சார்பாக அதிகபட்சமாக நூர் அகமது 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பின்னர் 283 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர்களாக குர்பாஸ் மற்றும் இப்ரஹிம் களமிறங்கினர். இருவரும் பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சை திறம்பட எதிர்கொண்டு ஓட்டங்களைச் சேர்த்தனர்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 130 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் பிரிந்தது. குர்பாஸ் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட இப்ரஹிம், 87 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் ரஹ்மத் ஷா மற்றும் அணித்தலைவர் ஹஸ்மத்துல்லா இருவரும் இணைந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச்சென்றனர்.

இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி 49 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து இலக்கைக் கடந்து 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

ரஹ்மத் ஷா 77 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் ஹஸ்ரத்துல்லா 48 ஓட்டங்களுடனும் கடைசி வரை களத்தில் நின்றனர்.

பாகிஸ்தான் சார்பாக ஷாகீன் அப்ரிடி, ஹசன் அலி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஆப்கானிஸ்தானின் இப்ரஹிம் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் ஆப்கானிஸ்தான் அணி 4 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் 6ஆவது இடத்தில் உள்ளது.

இன்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்கா – பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன.